இயல் இரண்டு

# அணிநிழல் காடு



## கற்றல் நோக்கங்கள்

- செய்யுளின் வருணனைப் பகுதிகளைப் படித்துச் சுவைத்தல்
- காடுகளும் காட்டு உயிர்களும் நாட்டின் உயிர்நாடி என்பதைப் புரிந்துகொள்ளுதல்
- காட்டு உயிர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பைக் குறித்துப் புரிந்துகொள்ளுதல்
- நேர்காணல் வடிவத்தில் அளிக்கப்பட்ட கருத்துகளைப் படித்துணரும் திறன் பெறுதல்
- எழுத்துகள் குறுகி ஒலிக்கும் இடங்களை அறிந்து பயன்படுத்துதல்



7th Std Tamil Term 1_13.01.2020.indd 25 14-01-2020 11:27:37

கவிதைப்பேழை

# இயல் இரண்டு

# காடு

7KBF1L

**நுழையும்முன்**

காடும் கடலும் நமக்கு எப்போதும் காட்சிக்கு இன்பம் தருபவை. ஒரு நாட்டின் வளம், அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொருத்தே மதிப்பிடப்படுகிறது. அதனால்தான் 'காட்டின் வளமே நாட்டின் வளம்' என்று அறிஞர்கள் கூறுகின்றனர். காட்டையும் காட்டின் குளிர்ச்சியையும் காட்டு விலங்குகளின் கொண்டாட்டங்களையும் கவிதை வழி அறிவோம்.



*கார்த்திகை தீபமெனக்*
*காடெல்லாம் பூத்திருக்கும்*
*பார்த்திட வேண்டுமடீ – கிளியே*
*பார்வை குளிருமடீ!*

*காடு பொருள்கொடுக்கும்*
*காய்கனி ஈன்றெடுக்கும்*
*கூடிக் களித்திடவே – கிளியே*
*குளிர்ந்த நிழல்கொடுக்கும்*

*குரங்கு குடியிருக்கும்*
*கொம்பில் கனிபறிக்கும்*
*மரங்கள் வெயில்மறைக்கும் – கிளியே*
*வழியில் தடையிருக்கும்*

*பச்சை மயில்நடிக்கும்
*பன்றி கிழங்கெடுக்கும்*
*நச்சர வங்கலங்கும் – கிளியே*
*நரியெலாம் ஊளையிடும்*

*அதிமது ரத்தழையை*
*யானைகள் தின்றபடி*
*புதுநடை போடுமடீ – கிளியே*
*பூங்குயில் கூவுமடி!*

*சிங்கம் புலிகரடி*
*சிறுத்தை விலங்கினங்கள்*
*எங்கும் திரியுமடீ – கிளியே*
*இயற்கை விடுதியிலே!**

– சுரதா



7th Std Tamil Term 1_13.01.2020.indd 26 14-01-2020 11:27:38

**சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஈன்று | - | தந்து | களித்திட | - | மகிழ்ந்திட |
| கொம்பு | - | கிளை | நச்சரவம் | - | விடமுள்ள பாம்பு |
| அதிமதுரம் | - | மிகுந்த சுவை | விடுதி | - | தங்கும் இடம் |

**பாடலின் பொருள்**

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும். காடு பல வகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிழ்ந்திடக் குளிர்ந்த நிழல் தரும். அங்கே வசிக்கும் குரங்குகள் மரக்கிளைகளில் உள்ள, கனிகளைப் பறித்து உண்ணும். மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும். அடர்ந்த காடு வழிச்செல்வோர்க்குத் தடையாய் இருக்கும்.

பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும். பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக்கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும். நரிக் கூட்டம் ஊளையிடும். மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடை போடும். பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும். இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

**நூல் வெளி**





சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் 'சுப்புரத்தினம்'. எனவே தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா என்பதாகும். உவமைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்பதால் இவரை உவமைக் கவிஞர் என்றும் அழைப்பர். அமுதும் தேனும், தேன்மழை, துறைமுகம் உள்ளிட்ட பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

இப்பாடல் தேன் மழை என்னும் நூலில் இயற்கை எழில் என்னும் பகுதியிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

இப்பாடல் கிளிக்கண்ணி என்னும் பாவகையைச் சேர்ந்தது. கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் வகை 'கிளிக்கண்ணி' ஆகும்.

**தெரிந்து தெளிவோம்**

**காட்டைக் குறிக்கும் வேறு பெயர்கள்**

கா, கால், கான், கானகம், அடவி, அரண், ஆரணி, புரவு, பொற்றை, பொழில், தில்லம், அழுவம், இயவு, பழவம், முளரி, வல்லை, விடர், வியல், வனம், முதை, மிளை, இறும்பு, சுரம், பொச்சை, பொதி, முளி, அரில், அறல், பதுக்கை, கணையம்.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 27 14-01-2020 11:27:38

## கற்பவை கற்றபின்

1. காடு என்னும் தலைப்பில் அமைந்த 'கிளிக்கண்ணிப்' பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. பின்வரும் கிளிக்கண்ணிப் பாடலைப் பாடி மகிழ்க.

*நெஞ்சில் உரமுமின்றி*
*நேர்மைத் திறமுமின்றி*
*வஞ்சனை சொல்வாரடீ! – கிளியே*
*வாய்ச்சொல்லில் வீரரடி.*
*கூட்டத்தில் கூடிநின்று*
*கூவிப் பிதற்றலன்றி*
*நாட்டத்தில் கொள்ளாரடீ! – கிளியே*
*நாளில் மறப்பாரடீ.*

*– பாரதியார்*

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வாழை, கன்றை ________.

அ) ஈன்றது ஆ) வழங்கியது இ) கொடுத்தது ஈ) தந்தது

2. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

அ) காடு + டெல்லாம் ஆ) காடு + எல்லாம் இ) கா + டெல்லாம் ஈ) கான் + எல்லாம்

3. 'கிழங்கு + எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

அ) கிழங்குஎடுக்கும் ஆ) கிழங்கெடுக்கும் இ) கிழங்குடுக்கும் ஈ) கிழங்கொடுக்கும்

**நயம் அறிக**

பாடலிலுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

**குறுவினா**

1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

**சிறுவினா**

'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

**சிந்தனை வினா**

காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் கூறக் காரணம் என்ன?



7th Std Tamil Term 1_13.01.2020.indd 28 14-01-2020 11:27:38

இயல் இரண்டு

கவிதைப்பேழை

# அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

7ZUA2X




நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே மரங்கள். அவை மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. மரங்களைப் பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. கால வெள்ளத்தில் மரங்கள் மறையலாம். அவற்றைப் பற்றிய நினைவுகள் மறையா என்பதை விளக்கும் கவிதை ஒன்றை அறிவோம்.

*ஊரின் வடகோடியில் அந்த மரம்*
*ஐந்து வயதில் பார்த்தபோதும்*
*இப்படியேதானிருந்தது*
*ஐம்பதைத் தாண்டி இன்றும்*
*அப்படியேதான்*

*தாத்தாவின் தாத்தா காலத்தில்*
*நட்டு வளர்த்த மரமாம்*
*அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்*

*பச்சைக்காய்கள் நிறம் மாறிச்*
*செங்காய்த் தோற்றம் கொண்டதுமே*
*சிறுவர் மனங்களில் பரவசம் பொங்கும்*

*பளபளக்கும் பச்சை இலைகளுடே*
*கருநீலக் கோலிக்குண்டுகளாய்*
*நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்*
*பார்க்கும்போதே நாவில் நீரூறும்*

*காக்கை குருவி மைனா கிளிகள்*
*இன்னும் பெயரறியாப் பறவைகளுடன்*
*அணில்களும் காற்றும் உதிர்த்திடும்*
*சுட்ட பழங்கள் பொறுக்க*
*சிறுவர் கூட்டம் அலைமோதும்*

*வயதுவந்த அக்காக்களுக்காய்*
*கையில் பெட்டியுடன் ஓடிஓடிப்*
*பழம் பொறுக்கும் தங்கச்சிகள்*

*இரவில் மெல்லிய நிலவொளியில்*
*படையெடுத்து வரும்*
*பழந்தின்னி வௌவால் கூட்டம்*

*தோப்பு முழுக்கப் பரவிக்கிடக்கும்*
*மரத்தின் குளிர்ந்த நிழலிலே*
*கிளியாந்தட்டின் சுவாரசியம்*
*புளியமிளாறுடன் அப்பா வரும்வரை*

*நேற்று மதியம் நண்பர்களுடன்*
*என் மகன் விளையாடியதும்*
*அந்த மரத்தின் நிழலில்தானே*

*பெருவாழ்வு வாழ்ந்த மரம்*
*நேற்றிரவுப் பேய்க்காற்றில்*
*வேரோடு சாய்ந்துவிட்டதாமே*
*விடிந்தும் விடியாததுமாய்*
*துஷ்டி கேட்கும் பதற்றத்தில்*
*விரைந்து செல்கிறார் ஊர்மக்கள்*
*குஞ்சு குளுவான்களோடு*

*எனக்குப் போக மனமில்லை*
*என்றும் என்மன வெளியில்*
*அப்படியே நிற்கட்டும் அந்த மரம்*
*குன்றுகளின் நடுவே மாமலைபோல*

– *ராஜமார்த்தாண்டன்*



7th Std Tamil Term 1_13.01.2020.indd 29 14-01-2020 11:27:38

**சொல்லும் பொருளும்**

பரவசம் – மகிழ்ச்சிப் பெருக்கு

துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்



**நூல் வெளி**

ராஜமார்த்தாண்டன் கவிஞர், இதழாளர், கவிதைத் திறனாய்வாளர் எனப் பன்முகத் திறன்கள் பெற்றவர். கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர். ராஜமார்த்தாண்டன் கவிதைகள் என்னும் நூலுக்காகத் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றவர். சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் தலைப்பில் நூலாக்கியுள்ளார்.

இவரது அப்படியே நிற்கட்டும் அந்த மரம் என்னும் நூலில் உள்ள கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.



## கற்பவை கற்றபின்

1. உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து வருணனையாக ஐந்து தொடர்கள் எழுதுக.
2. உங்கள் பகுதிகளில் உள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 30 14-01-2020 11:27:39

3. பின்வரும் புதுக்கவிதைகளைப் படித்துச் சுவைக்க.

- கொப்புகள் விலக்கி
  கொத்துக் கொத்தாய்
  கருவேலங்காய்
  பறித்துப் போடும் மேய்ப்பனை
  ஒருநாளும்
  சிராய்ப்பதில்லை
  கருவமுட்கள்.

- குழந்தை
  வரைந்தது
  பறவைகளை மட்டுமே
  வானம்
  தானாக உருவானது.

– கலாப்ரியா



## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது _____.
   அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

2. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை _____.
   அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்
   இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள்

3. 'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) பெயர + றியா ஆ) பெயர் + றறியா
   இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா

4. 'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.
   அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை
   இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை

5. நேற்று + இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு

குறுவினா

1. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?
2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

சிறுவினா

நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

சிந்தனை வினா

பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ஏன் பார்க்க விரும்பவில்லை?



7th Std Tamil Term 1_13.01.2020.indd 31 14-01-2020 11:27:39

உரைநடை உலகம்

# இயல் இரண்டு

# விலங்குகள் உலகம்

9A5Y59

**நுழையும்முன்**

வளம் நிறைந்த நிலம், அடர்ந்த மரம், செடி கொடிகள், நன்னீர், நறுங்காற்று என அனைத்தும் நிரம்பியது காடாகும். இது பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடமாகும். காடுகளின் செழிப்புக்குக் காட்டுயிரிகள் உதவுகின்றன. மனிதனின் முதல் இருப்பிடம் காடுதான். அதன் மரபுத் தொடர்ச்சியாகத்தான் காட்டைப்பற்றியும் காட்டு விலங்குகள் பற்றியும் அறியும் ஆர்வம் மனிதர்களிடம் இன்றும் தொடர்கிறது. காட்டு விலங்குகளின் உறைவிடமான முண்டந்துறை புலிகள் காப்பகத்துள் ஓர் உலா வருவோமா!




பள்ளியிலிருந்து வீடு திரும்பிய ஆதினி தன் அம்மாவுக்காகக் காத்திருந்தாள். பணியில் இருந்து வீடு திரும்பிய அம்மாவிடம் 'அம்மா! எனக்குக் காட்டு விலங்குகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு ஒன்று தயாரிக்க வேண்டி இருக்கிறது. அதற்குத் தாங்கள் தான் உதவ வேண்டும்' என்று கூறினாள். 'அப்படியா! எனக்குத் தெரிந்த வனஅலுவலர் ஒருவர் முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் பணியாற்றுகிறார். அவரிடம் முன் இசைவு பெற்று நாளை நாம் அங்குச் செல்லலாம். வன அலுவலர் நம்மைக் காட்டுக்குள் அழைத்துச் செல்வார்; அப்பொழுது நீ காட்டு விலங்குகளைப் புகைப்படம் எடுக்கலாம்; அவற்றைப் பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம். என்ன மகிழ்ச்சிதானே!' என்றார் அம்மா.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 32 14-01-2020 11:27:39

மறுநாள் ஆதினியும் அவளது தாய் மலர்விழியும் முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்குச் சென்றனர். அங்கு வன அலுவலர் (வனவர்) அவர்களை வரவேற்றார். அவர்கள் இருவரையும் பாதுகாப்பு ஊர்தியில் ஏற்றிக் காட்டுக்குள் அழைத்துச் சென்றார். அப்போது...

ஆதினி : ஆ! எவ்வளவு பெரிய அடர்ந்த காடு! பார்க்கவே வியப்பாக உள்ளதே! மாமா இந்தக் காட்டைப் பற்றிச் சொல்லுங்களேன்!

வனவர் : மனித முயற்சியின்றி வளர்ந்த மரங்கள், செடிகள், கொடிகள், புல், புதர்கள், பூச்சியினங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடம்தான் இக்காடாகும். இடை இடையே காட்டாறுகளும், நீரோடைகளும் இருக்கும்.

மலர்விழி : காடு பார்ப்பதற்கு மிகவும் அழகாக உள்ளது. இந்தப் புலிகள் காப்பகம் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ளலாமா ஐயா?

வனவர் : இது தமிழ்நாட்டில் இரண்டாவது மிகப்பெரிய காப்பகம். 895 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இங்கு யானை, புலி, சிறுத்தை, மான், கரடி, காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன. அவற்றை எல்லாம் பார்க்கலாம்.

ஆதினி : இன்று எல்லா விலங்குகளையும் பார்க்க முடியுமா மாமா?

வனவர் : அப்படிச் சொல்ல முடியாது. நாம் பயணம் செய்யும் பாதைக்கு அருகில் வரக்கூடிய விலங்குகளைத்தான் பார்க்க முடியும்.

மலர்விழி : அவை இருக்கும் இடங்களுக்குச் சென்று பார்க்க முடியாதா ஐயா?

வனவர் : எல்லா இடங்களுக்கும் செல்ல முடியாது. காட்டு விலங்குகளுக்குத் துன்பம் தருவது சட்டப்படி குற்றமாகும். நாம் அரசு அனுமதித்துள்ள தூரம் வரை சென்று வரலாம். கவலை வேண்டாம். அவ்விடத்திற்குள்ளேயே அனைத்து விலங்குகளையும் நம்மால் பார்க்க முடியும்.

*(அப்போது தூரத்தில் யானைக் கூட்டம் ஒன்று சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்த ஆதினி 'யானை! யானை!' என்று மகிழ்ச்சியுடன் கைதட்டினாள். பின்பு அந்த யானைகளைப் புகைப்படம் எடுத்துக் கொண்டாள்.)*



ஆசிய யானை



ஆப்பிரிக்க யானை

ஆதினி : மாமா! யானையைப் பற்றிப் புதிய தகவல்கள் ஏதாவது சொல்லுங்களேன்?

வனவர் : உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. ஒன்று ஆசிய யானை; இன்னொன்று ஆப்பிரிக்க யானை.

ஆதினி : அவை இரண்டுக்கும் என்ன வேறுபாடு மாமா?

மலர்விழி : எனக்குத் தெரியும். ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இல்லை. ஆனால் ஆப்பிரிக்க யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு. சரிதானே ஐயா?

வனவர் : சரியாகச் சொன்னீர்கள்! அது மட்டுமன்றி அவற்றின் உயரம், நிறம், நகம் ஆகியவற்றிலும் சில வேறுபாடுகள் உள்ளன.

ஆதினி : மாமா! யானைகள் எப்போதும் கூட்டமாகத்தான் இருக்குமா?

வனவர் : ஆம் ஆதினி. யானைகள் எப்பொழுதும் கூட்டமாகத்தான் வாழும். இந்தக் கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும். யானைகள் தங்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு ஆகியவற்றிற்காக இடம்பெயர்ந்து கொண்டே இருக்கும். ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும். அதற்குக் குடிக்க அறுபத்தைந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும். யானை மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு. அது பாசம் நிறைந்த விலங்கும் கூட.

மலர்விழி : ஆனால் யானைகள் மனிதர்களைத் தாக்குவதாகச் செய்தித்தாள்களில் செய்திகள் வருகின்றனவே ஐயா?

வனவர் : யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவது இல்லை. அவற்றின் வழித்தடங்களில் குறுக்கிடும்போதுதான் மனிதர்களைத் தாக்குகின்றன. மேலும் யானைக்குக் கண்பார்வை குறைவு; கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதி.

***(அவர்கள் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் யானைகள் அவ்விடத்தைக் கடந்து சென்றன. ஊர்தி தொடர்ந்து மேலே சென்றது. )***

### தெரிந்து தெளிவோம்

- தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் – மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்)
- கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை வனவியல் (B.Sc. Forestry), முதுநிலை வனவியல் (M.Sc. Forestry) ஆகிய படிப்புகள் உள்ளன.

வனவர் : அதோ! அந்த மரத்தின் மீது இருப்பது என்னவென்று சொல்லுங்கள் பார்ப்போம்?


ஆதினி : ஆ! எவ்வளவு பெரிய கரடி. கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா?

வனவர் : கரடி ஓர் அனைத்துண்ணி. அது பழங்கள், தேன் போன்றவற்றை உண்பதற்காக மரங்களில் ஏறும். உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல் ஆகியவற்றையும் தேடி உண்ணும். கறையான் அதற்கு மிகவும் பிடித்த உணவு.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 34 14-01-2020 11:27:39

மலர்விழி : தேன்கூட்டைக் கலைக்கும் போது தேனீக்கள் அதைக் கொட்டிவிடாதா ஐயா?



வனவர் : கரடியின் உடலைப் போர்த்தி இருக்கும் அடர்ந்த முடிகள் தேனீக்களிடமிருந்து அதனைக் காப்பாற்றி விடும். நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்.

*(ஆதினி தன் அலைபேசியில் கரடியைப் புகைப்படம் எடுத்துக்கொண்டாள். 'இன்னும் ஒரு புலிகூட நம் கண்ணில் படவில்லையே!' என்று ஆதினி சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது வனவர் ஊர்தியை நிறுத்தினார். சற்றுத் தொலைவில் புல்வெளி மீது புலி ஒன்று படுத்திருந்தது. வனவர் அதை அனைவருக்கும் காட்டினார்.)*

ஆதினி : எனக்கு அச்சமாக உள்ளது. புலி நம்மைத் தாக்கிவிட்டால் என்ன செய்வது? வாருங்கள் திரும்பிவிடலாம்.

வனவர் : அச்சம் வேண்டாம் ஆதினி! புலி மனிதர்களைத் தாக்குவதில்லை. இரவில் மட்டுமே வேட்டையாடும் தன்மை கொண்டது.

ஆதினி : அப்படியா! நான் இங்கிருந்தபடியே புகைப்படம் எடுத்துக் கொள்கிறேன். மாமா இங்கு ஒரே ஒரு புலி தானே இருக்கிறது.



வனவர் : ஆமாம். புலிகள் தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது. கருவுற்ற புலியானது தொண்ணூறு நாட்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும். அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்த்து வரும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்துத் தனியாக அனுப்பிவிடும்.

ஆதினி : அரிய தகவலாக இருக்கிறதே!

வனவர் : ஆம். புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. எனவே, அதனைப் பண்புள்ள விலங்கு என்று நாங்கள் கூறுவோம். சரி காட்டுக்குள் நமக்கு அனுமதிக்கப்பட்ட இடம் வரைக்கும் வந்து விட்டோம். இனி நாம் அலுவலகம் செல்வோம்.

ஆதினி : 'காட்டுக்கு அரசன்' என்று சிங்கத்தைச் சொல்கிறார்களே! அதுபற்றிச் சொல்லுங்கள் மாமா.

வனவர் : உலகில் ஆசியச் சிங்கம், ஆப்பிரிக்கச் சிங்கம் என இரண்டு வகைச் சிங்கங்கள் வாழ்கின்றன. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் 'கிர் சரணாலயத்தில்' மட்டுமே ஆசியச் சிங்கங்கள் உள்ளன. நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத்திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தை விட புலியே உயர்ந்தது. எனவே இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.

*(ஊர்தி அலுவலகம் நோக்கி விரையும் வழியில் ஒரு புள்ளிமான் தன் குட்டியுடன் புல்தரையில் நின்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் ஆதினி ஊர்தியை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கி புகைப்படம் எடுத்துக் கொண்டாள்.)*



வனவர் : ஆதினி, இவை புள்ளிமான்கள். இந்தியாவில் சருகுமான், மிளாமான், வெளிமான் எனப் பல வகையான மான்கள் உள்ளன. எல்லாவகை மான்களிலும் நம் நாட்டுப் புள்ளிமான்களே அழகில் சிறந்தவை என்பர்.

*(ஆதினியும் அவள் தாய் மலர்விழியும் வனஅலுவலர்க்கு நன்றி கூறி விடை பெற்றனர். ஆதினி, தன் படத்தொகுப்பிற்குத் தேவையான புகைப்படங்களும் குறிப்புகளும் கிடைத்த மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள்.)*

## கற்பவை கற்றபின்

1. விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டி வருக.
   (எ.கா.) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
2. காட்டு விலங்குகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆசிய யானைகளில் ஆண் – பெண் யானைகளை வேறுபடுத்துவது ____.

   அ) காது ஆ) தந்தம் இ) கண் ஈ) கால்நகம்

2. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் _______.

   அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்

3. 'காட்டாறு' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

   அ) காடு + ஆறு ஆ) காட்டு + ஆறு இ) காட் + ஆறு ஈ) காட் + டாறு

4. 'அனைத்துண்ணி' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) அனைத்து + துண்ணி ஆ) அனை + உண்ணி

   இ) அனைத் + துண்ணி ஈ) அனைத்து + உண்ணி

5. 'நேரம் + ஆகி' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

   அ) நேரமாகி ஆ) நேராகி இ) நேரம்ஆகி ஈ) நேர்ஆகி

6. 'வேட்டை + ஆடிய' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

   அ) வேட்டைஆடிய ஆ) வேட்டையாடிய இ) வேட்டாடிய ஈ) வேடாடிய

கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' – என்று அழைக்கப்படும் விலங்கு _____.
2. யானைக் கூட்டத்திற்கு ஒரு ______ யானைதான் தலைமை தாங்கும்.
3. கரடிகளைத் தேனீக்களிடமிருந்து காப்பது அதன் _____.

குறுவினா

1. காடு – வரையறுக்க.
2. யானைகள் மனிதர்களை ஏன் தாக்குகின்றன?
3. கரடி 'அனைத்துண்ணி' என அழைக்கப்படுவது ஏன்?
4. மானின் வகைகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக

சிறுவினா

புலிகள் குறித்து நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிடுக.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 37 14-01-2020 11:27:39

விரிவானம்

இயல் இரண்டு

# இந்திய வனமகன்

(நேர்காணல்)

9Y7C41

நுழையும்முன்

மனித முயற்சியின்றி உருவாகிய வானளாவிய மரங்களும் அடர்ந்த செடி கொடிகளும் நிறைந்த இடமே காடாகும். ஆனால் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மணல் தீவில் அமைந்த இந்தக் காடு சற்று வேறுபட்டது. மணல் தீவுகளில் மூங்கில் மட்டுமே வளர வாய்ப்புண்டு என்பர். ஆனால் பல்வகை மரங்கள் நிறைந்த இந்தக் காட்டை ஒரு தனி மனிதர் உருவாக்கியுள்ளார். அவரைச் சந்திப்போம்.



ஓர் அடர்ந்த காடு. காட்டின் நடுவில் மூங்கிலால் அமைந்த ஒரு வீடு. வீட்டினுள் சிலர் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். அப்போது யானைகள் பிளிறும் ஓசை கேட்கிறது. வீட்டினுள் உறங்கிக் கொண்டிருந்த குடும்பத்தலைவர் வெளியில் வந்து பார்க்கின்றார். நள்ளிரவு நேரம் என்பதால் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. ஆனாலும் சில யானைகள் அவர் வீட்டை நோக்கி வருவதைத் தனது நுண்ணறிவால் தெரிந்து கொள்கிறார். உடனே வீட்டுக்குள் சென்று மற்றவர்களை எழுப்பி, வீட்டை விட்டு வெளியேற்றிப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கிறார். யானைகள் அவருடைய மூங்கில் வீட்டை அடித்து உடைக்கின்றன. தூரத்திலிருந்து இக்காட்சியைப் பார்த்த குடும்பத்தலைவர் மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றார். யானைகள் தனது வீட்டை அடித்து நொறுக்குவதைக் கண்ட ஒருவரால் மகிழ்ச்சி அடைய முடியுமா?

ஆம். அவ்வாறு மகிழ்ச்சி அடைந்தவர்தான் அஸ்ஸாம் மாநிலத்தின் ஜோர்விராட் மாவட்டத்தைச் சேர்ந்த ஜாதவ்பயேங். அவர் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவில் உள்ள மிகப்பெரிய தீவில் முப்பது ஆண்டுகள் தனது கடின உழைப்பால் ஒரு காட்டை உருவாக்கியவர். அக்காட்டிலேயே தமது வாழ்வைக் கழித்துக் கொண்டிருப்பவர்; யானைகளின் வருகையைத் தமது உழைப்பிற்குக் கிடைத்த பரிசாகக் கருதியவர்; 'இந்தியாவின் வனமகன்' என்று அழைக்கப்படும் அவருடன் உரையாடுவோம்.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 38 14-01-2020 11:27:39

**வணக்கம் ஐயா. உங்களுக்கு இந்தக் காட்டை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி உருவானது?**

பிரம்மபுத்திரா ஆற்றில் ஆண்டுதோறும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். 1979 ஆம் ஆண்டும் அது போன்று ஒரு பெருவெள்ளம் ஏற்பட்டது. வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட ஏராளமான பாம்புகள், மரங்கள் இல்லாத இத்தீவில் கரை ஒதுங்கின. அவற்றுள் சில பாம்புகள் இறந்து கிடந்தன. பல பாம்புகள் வெப்பம் தாங்காமல் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தன. இந்தக்காட்சி என்னை மிகவும் பாதித்தது. ஊருக்குள் சென்று பெரியவர்களிடம் இதைப் பற்றிப் பேசினேன். 'தீவில் மரங்கள் இல்லை, அதனால்தான் பாம்புகள் மடிந்து போகின்றன. அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது' என்று கூறி விட்டனர். 'மரங்கள் இல்லாததால்தான் பாம்புகள் இறந்தன எனில், உலகில் உள்ள மரங்கள் முழுவதும் அழிந்து விட்டால் மனிதனும் இப்படித்தானே இறந்து போவான்' என்று எண்ணிய எனக்கு உடல் நடுங்கியது. அப்பொழுதே இந்தத்தீவு முழுவதும் மரங்களை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் என் மனத்தில் ஆழப்பதிந்து விட்டது.

**உங்கள் எண்ணத்திற்கு ஊர் மக்கள் எப்படி உதவி செய்தார்கள்?**

ஊர் மக்களிடம், 'அத்தீவில் மரங்கள் வளர்க்கலாம்' என்று நான் கூறிய பொழுது அதை யாரும் ஏற்கவில்லை. 'அத்தீவில் மரங்களை வளர்க்கவே முடியாது. போய் உன் வேலையைப் பார்' என்று கூறிவிட்டனர்.

**பிறகு என்ன செய்தீர்கள் ஐயா?**

நான் கைகளில் கிடைத்த விதைகளை எடுத்துக் கொண்டு இந்தத்தீவிற்கு வந்தேன். இங்கு அவற்றை விதைத்து நாள்தோறும் தண்ணீர் ஊற்றி வந்தேன். ஆயினும் ஒரு விதைகூட முளைக்கவில்லை. பிறகு வனத்துறையினரை அணுகி என்ன செய்யலாம் என்று கேட்டபோது அவர்கள், 'அத்தீவில் மூங்கில் மரம் மட்டுமே வளரும்' என்று கூறினர். எனக்கு உடனே உற்சாகம் பிறந்துவிட்டது. மூங்கில்களைக் கொண்டு வந்து அவற்றை இங்கு நட்டு வளர்க்கத் தொடங்கினேன். அவை விரிந்து வளரத் தொடங்கின. இனிமேல் இத்தீவில் மரம் வளர்ப்பது ஒன்றே எனது வேலை என்று அப்போதே முடிவு செய்து விட்டேன் .

**மூங்கில் மட்டுமே நட்டதாகக் கூறுகிறீர்கள். ஆனால் இந்தக் காடு முழுவதும் பல்வேறு மரங்கள் வளர்ந்துள்ளனவே! எப்படி ஐயா?**

எங்கள் பகுதியில் அரசு சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியது. அதில் என்னை நான் இணைத்துக் கொண்டேன். அவர்களுடன் இணைந்து இத்தீவு முழுவதும் பல்வேறு மரங்களை நடத் தொடங்கினேன். அந்தத் திட்டம் மூன்று ஆண்டுகளில் முடிந்துவிட்டது. நான் மட்டும் இங்கேயே தங்கி இருந்து அனைத்து மரக்கன்றுகளையும் பாதுகாத்து வந்தேன். ஆனால் மூங்கிலைத் தவிர வேறு எந்த மரமும் வளரவில்லை. அப்போதுதான் அசாம் வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜாதுநாத் அவர்களின் நினைவு எனக்கு வந்தது. சிறுவயதிலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். அவரிடம் சென்று என்னுடைய மரம் வளர்க்கும் திட்டம் பற்றிக் கூறினேன். உடனே அவர், 'மணல் பரப்பில் மற்ற மரங்கள் வளர வேண்டுமெனில் மண்ணின் தன்மையை அதற்கு ஏற்ப மாற்ற வேண்டும். அதற்கு மண்புழுக்கள் மட்டுமன்றிச் சிவப்புக் கட்டெறும்புகளும் உதவும்' என்று கூறினார்.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 39 14-01-2020 11:27:39

**கட்டெறும்புகளா? அவை கடித்தால் உடம்பில் கடுமையான எரிச்சல் ஏற்படுமே?**

ஆமாம். ஆனால் என்ன செய்வது? மண்ணின் தன்மையை மாற்ற வேண்டுமே அதற்காக நாள்தோறும் நூற்றுக்கணக்கான எறும்புகளைக் கொண்டுவந்து இங்கு விட ஆரம்பித்தேன். கட்டெறும்புகள் ஊர்ந்து செல்லச் செல்ல மண்ணின் தன்மை சிறிது சிறிதாக மாறத்தொடங்கியது. காடுகளில் ஆங்காங்கே பச்சைப் பசும்புற்கள் தலைகாட்டத் தொடங்கின. அப்பொழுது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அதன் பின்பு நான் நட்ட மரங்கள் அனைத்தும் வளர்ந்தன.

**இவ்வளவு மரங்களை வளர்ப்பதற்கு விதைகளும் உரமும் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?**

கால்நடைகள் வளர்ப்பதுதான் என்னுடைய வேலை. அவற்றின் சாணத்தை ஒரு துளி கூட வீணாக்காமல் இயற்கை உரம் தயாரிக்கத் தொடங்கினேன். ஒரு பழம் சாப்பிட்டால் கூட அதன் கொட்டையை வீசி எறியாமல் விதையாகச் சேர்த்து வைப்பேன். பிறகு மழைக்காலம் தொடங்குவதற்கு முன் விதைகளை எடுத்து இத்தீவில் தூவத்தொடங்கி விடுவேன். இப்படி ஒவ்வோர் ஆண்டும் நான் தூவிய விதைகள்தாம் இப்போது நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் இக்காடு.

**மழை இல்லாத காலங்களில் செடிக்கு எப்படித் தண்ணீர் ஊற்றினீர்கள் ?**

ஆற்றின் கரையோரம் இருந்த செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவதில் எனக்குச் சிக்கல் ஏற்படவில்லை. ஆனால் தொலைவில் இருந்த செடிகளுக்கு நீர் ஊற்றுவது சற்றுக் கடினமான செயலாக இருந்தது. அதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தேன். செடியைச் சுற்றி மூங்கில் குச்சிகளை நட்டுவைத்து அதில் ஒரு பானையைப் பொருத்தினேன். அதில் ஒரு சிறுதுளை இட்டு, நீர் சொட்டுச் சொட்டாக வடிவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன். பிறகு அதில் நீர் நிரப்பினால் ஒரு வாரத்திற்குச் சிக்கல் இருக்காது. இப்படித்தான் மற்ற செடிகளை வளர்த்து வந்தேன்.

**சரி, உங்கள் வீட்டிற்கு யானை வந்த கதையைக் கூறுங்களேன்!**

நான் நட்ட செடிகள் முழுவதும் மரங்களாக வளரத் தொடங்கியபோது அவற்றில் பறவைகள் வந்து தங்கின. பறவைகளின் எச்சத்தால் பரவிய விதைகள் இந்தக் காடு வளர மேலும் துணைபுரிந்தன. பிறகு முயல், மான், காட்டு மாடுகள் என விலங்குகள் பலவும் வரத்தொடங்கின. அப்படித்தான் ஒருநாள் யானைக் கூட்டம் ஒன்று வந்தது. யானைகள் தங்கியிருக்கும் காடுதான் வளமான காடு என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். நான் வளர்த்த காட்டுக்கு யானைகள் வந்த நாள் என் வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான நாளாக அமைந்தது. அதன் பிறகு இங்கு பாம்புகள், கழுகுகள், காண்டா மிருகங்கள் போன்ற காட்டு விலங்குகள் பலவும் வரத் தொடங்கின. நிறைவாகக் 'காட்டின் வளம்' என்று குறிக்கப்படும் புலிகளும் வந்து தங்கத் தொடங்கின.

### தெரிந்து தெளிவோம்

- 2012 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஜாதவுக்கு 'இந்திய வனமகன் (Forest Man of India)' என்னும் பட்டத்தை வழங்கியுள்ளது.
- 2015 ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மஸ்ரீ விருதை வழங்கியுள்ளது.
- கௌகாத்தி பல்கலைக்கழகம் 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கியுள்ளது.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 40
14-01-2020 11:27:40

**புலிகளும் இந்தக் காட்டில் உள்ளனவா? உங்களுக்கு அச்சமாக இல்லையா?**

இல்லை. புலிகள் வந்த பிறகுதான் இக்காட்டின் உணவுச்சங்கிலி நிறைவடைந்தது, நான் புலிகளுக்குத் தொல்லையில்லாமல் எனது பாதைகளை வகுத்துக்கொண்டு இக்காட்டைப் பாதுகாத்து வருகிறேன்.

**இது மிகக் கடினமான பணி. மற்றவர்களுக்கு எப்படித் தெரிந்தது?**

ஜிட்டுகலிட்டா என்னும் வனவிலங்கு ஆர்வலர் என்னுடைய காட்டைப் பற்றிக் கேள்விப்பட்டு இங்கு வந்தார். நான் இந்தக் காட்டை உருவாக்கிய முறையை அவரிடம் கூறினேன். என்னைப் பாராட்டிப் பேசிவிட்டு அவர் இங்கிருந்து சென்றுவிட்டார். பிறகு ஒருநாள் யானைக் கூட்டத்தை விரட்டிக் கொண்டு வந்த வனக்காவலர்கள் என்னுடைய இந்தக் காட்டைக் கண்டு வியந்தனர். அவர்களுடைய கணக்கெடுப்பு வரைபடத்தில் இல்லாத இந்தக் காட்டைக் கண்டு மகிழ்ந்தனர். அதன் பிறகு என்னுடைய காடு பற்றி டைம்ஸ் ஆப் இந்தியா இதழில் செய்தி வெளிவந்தது.

**மிக்க மகிழ்ச்சி ஐயா. அடுத்து உங்களுடைய பணி என்ன?**

இந்தத்தீவின் மற்றொரு பகுதியில் இன்னொரு காட்டை உருவாக்கத் தொடங்கியிருக்கிறேன். எப்படியும் அதற்கு முப்பது ஆண்டுகள் ஆகலாம். ஆனால் அதற்கு உதவ என்னுடைய மனைவியும் குழந்தைகளும் உள்ளனர். ஆதலால் அங்கு உறுதியாக ஒரு காட்டை உருவாக்குவேன்.

**உங்களுடைய இந்தத் திட்டத்தைக் கேட்கும் பொழுது உங்களை மிகவும் பாராட்டத் தோன்றுகிறது ஐயா.**

நீங்கள் என்னைப் பாராட்ட வேண்டுமெனில் ஆளுக்கு இரண்டு மரக்கன்றுகளை நட்டு வளருங்கள். அதுவே எனக்குப் போதும்.

**உறுதியாக ஐயா, உங்களோடு பேசிய பிறகு நானும் கட்டாயம் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கத் தொடங்குவேன். உங்கள் பணி மேலும் தொடரட்டும். இன்னும் சிறப்படைய வாழ்த்துகிறேன். நான் சென்று வருகிறேன் ஐயா! நன்றி.**

ஜாதவ்பயேங் போன்று நாமும் ஒரு காட்டை உருவாக்க முயல்வோம்; அதற்கு அடையாளமாக நம் வீட்டைச் சுற்றி ஒருசில மரங்களை நட்டு வளர்ப்போம். அதற்கு நாம் அனைவரும் உறுதி ஏற்போம். மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்! நாட்டின் வளம் காப்போம்!

## கற்பவை கற்றபின்

உங்கள் பள்ளி அல்லது நீங்கள் வாழும் பகுதியில் மரக்கன்று ஒன்றை நடுங்கள். அதனை நாள்தோறும் பாதுகாத்து வாருங்கள். அதன் விவரங்களைப் பதிவேட்டில் பதிவு செய்யுங்கள்.

## மதிப்பீடு

ஜாதவ்பயேங் காட்டை எவ்வாறு உருவாக்கினார்?

கற்கண்டு

# இயல் இரண்டு

# நால்வகைக் குறுக்கங்கள்

22IUPZ

ஒவ்வோர் எழுத்துக்கும் அதை ஒலிப்பதற்கு உரிய கால அளவு உண்டு. இதை மாத்திரை என்பர். ஆனால் எல்லா எழுத்துகளும் எல்லா இடங்களிலும் தமக்குரிய மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதில்லை. சில எழுத்துகள் சில இடங்களில் தமக்குரிய கால அளவைவிடக் குறைவாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் எழுத்துகளைக் குறுக்கங்கள் என்கிறோம்.

## ஐகாரக்குறுக்கம்

ஐ, கை, பை என ஐகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. வையம், சமையல், பறவை என சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

## ஔகாரக்குறுக்கம்

ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. ஔவையார், வௌவால் எனச் சொற்களின் முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.

## மகரக்குறுக்கம்

அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

வலம் வந்தான் என்பதில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 42 14-01-2020 11:27:40

போலும் என்னும் சொல்லைப் போன்ம் என்றும், மருளும் என்னும் சொல்லை மருண்ம் என்றும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர். இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

**ஆய்தக் குறுக்கம்:**

அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

முள் + தீது என்பது முஃடீது எனவும், கல் + தீது என்பது கஃறீது எனவும் சேரும். இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

## கற்பவை கற்றபின்

ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்து எழுதுக.

## மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ______.
   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு
2. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ________.
   அ) போன்ம் ஆ) மருண்ம் இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது
3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது _______.
   அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம்
   இ) மகரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்

குறுவினா

1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?
2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?
3. மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

## மொழியை ஆள்வோம்!

51P2VY

### கேட்க.

இயற்கை ஆர்வலர் ஒருவரது உரையைக் கேட்டு மகிழ்க.

### கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றைப் பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. காட்டு வளமே நாட்டு வளம்!
2. காட்டின் பயன்கள்.

### சொல்லக் கேட்டு எழுதுக.

1. மரங்கள் வெயிலை மறைக்கும்.
2. மனிதர் வாழ்வு இயற்கையோடு இயைந்தது.
3. பெருவாழ்வு வாழ்ந்த மரம் பேய்க்காற்றில் சாய்ந்தது.
4. காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு புலியாகும்.
5. யானைகள் கூட்டமாக வாழும் இயல்புடையவை.

### அறிந்து பயன்படுத்துவோம்.

பால் ஐந்து வகைப்படும். அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகியனவாகும்.

உயர்திணையில்,

1. ஓர் ஆணைக் குறிப்பது ஆண்பால். (எ.கா.) மாணவன், செல்வன்.
2. ஒரு பெண்ணைக் குறிப்பது பெண்பால். (எ.கா) ஆதினி, மாணவி .
3. ஒன்றுக்கு மேற்பட்டவர்களைக் குறிப்பது பலர்பால். (எ.கா.) மாணவர்கள், மக்கள் .

அஃறிணையில்,

4. ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால்.

   (எ.கா.) கல், பசு.

5. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால்.

   (எ.கா.) மண் புழுக்கள், பசுக்கள்.

### எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | **மகளிர்** | X | ___________ | 2. | **அரசன்** | X | ___________ |
| 3. | **பெண்** | X | ___________ | 4. | **மாணவன்** | X | ___________ |
| 5. | **சிறுவன்** | X | ___________ | 6. | **தோழி** | X | ___________ |



7th Std Tamil Term 1_13.01.2020.indd 44 14-01-2020 11:27:40

**படத்திற்குப் பொருத்தமான பாலை எழுதுக.**





ஒன்றன்பால்











**பிழையைத் திருத்திச் சரியாக எழுதுக.**

(எ.கா.) கண்ணகி சிலம்பு அணிந்தான். – கண்ணகி சிலம்பு அணிந்தாள்.

1. கோவலன் சிலம்பு விற்கப் போனாள்.
2. அரசர்கள் நல்லாட்சி செய்தார்.
3. பசு கன்றை ஈன்றன.
4. மேகங்கள் சூழ்ந்து கொண்டது.
5. குழலி நடனம் ஆடியது.

**கடிதம் எழுதுக.**

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

## மொழியோடு விளையாடு

**வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க.**






7th Std Tamil Term 1_13.01.2020.indd 45
14-01-2020 11:27:40

சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

| | | | | |
|---|---|---|---|---|
| வாழை | தயிர் | கூடு | திடல் | பாட்டு |
| குருவி | கொய்யா | சோறு | பழம் | பறவை |
| விளையாட்டு | கூட்டம் | அவரை | போட்டி | காய் |

(எ.கா.) வாழை + காய் = வாழைக்காய்

விடுகதைகளுக்கு விடை எழுதுக.

1. மரம் விட்டு மரம் தாவுவேன்; குரங்கு அல்ல.
வளைந்த வாலுண்டு; புலி அல்ல.
கொட்டைகளைக் கொறிப்பேன்; கிளி அல்ல.
முதுகில் மூன்று கோடுகளை உடையவன். நான் யார்? ___________.

2. என் பெயர் மூன்று எழுத்துகளைக் கொண்டது.
முதலெழுத்தை நீக்கினால் மறைப்பேன்.
இரண்டாம் எழுத்தை நீக்கினால் குரைப்பேன்.
மூன்றாம் எழுத்தை நீக்கினால் குதிப்பேன். நான் யார்? ___________.

3. வெள்ளையாய் இருப்பேன்; பால் அல்ல.
மீன் பிடிப்பேன்; தூண்டில் அல்ல
தவமிருப்பேன்; முனிவரல்ல நான் யார்? ___________.

## நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. என்னால் இயன்ற அளவு மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.
2. இயற்கைச் சமநிலையைப் பேணிப் பாதுகாப்பேன்.

**கலைச்சொல் அறிவோம்.**

| | | | |
|---|---|---|---|
| தீவு | – Island | உவமை | – Parable |
| இயற்கை வளம் | – Natural Resource | காடு | – Jungle |
| வன விலங்குகள் | – Wild Animals | வனவியல் | – Forestry |
| வனப் பாதுகாவலர் | – Forest Conservator | பல்லுயிர் மண்டலம் | – Bio Diversity |

## இணையத்தில் காண்க

இந்தியாவிலுள்ள வனவிலங்குக் காப்பகங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டி வருக.




7th Std Tamil Term 1_13.01.2020.indd 46 14-01-2020 11:27:40

வாழ்வியல்

இயல் இரண்டு

# திருக்குறள்

89CSZD




"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார். மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள். இது போன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்பர். அத்தகைய பெருமைமிகு திருக்குறளைப் படிப்போம்.

### அழுக்காறாமை

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
*அழுக்காறு இலாத இயல்பு.*

பொருள் : ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத குணத்தையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

2. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
*கேடும் நினைக்கப் படும்.*

பொருள்: பொறாமை கொண்டவருடைய செல்வமும், பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

### புறங்கூறாமை

3. *கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க*
*முன்இன்று பின்நோக்காச் சொல்.*

பொருள்: ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

4. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

பொருள்: பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 47 14-01-2020 11:27:40

## அருளுடைமை

5. *அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
*பூரியார் கண்ணும் உள.*

பொருள்: அருளாகிய செல்வமே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

6. *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்*
*மெலியார்மேல் செல்லும் இடத்து.*

பொருள்: ஒருவர் தம்மைவிட மெலிந்தவரை துன்புறுத்தும்போது, தம்மைவிட வலிமையுடையவரின் முன் தான் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

## வாய்மை

7. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.**

பொருள்: வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

8. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்.*

பொருள்: ஒருவர் தம் நெஞ்சறிய பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவரை வருத்தும்.

9. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.**

பொருள்: உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

## இறைமாட்சி

10. *இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள்: பொருள் வரும் வழிகளை அறிதலும், அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைப் பாதுகாத்தலும், காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதலும் சிறந்த அரசின் செயல்களாகும்.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 48 14-01-2020 11:27:40



**நூல் வெளி**



திருக்குறளைத் தந்த **திருவள்ளுவர்** இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று கூறுவர். இவர் **முதற்பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார்** போன்ற சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார்.

தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள் ஆகும். திருக்குறள் **அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்** என மூன்று பகுப்புகளைக் கொண்டது. இதில் அறம்–38, பொருள்–70, இன்பம்–25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன. இதற்கு **முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி** போன்ற பிற பெயர்களும் உள்ளன.

## மதிப்பீடு

*சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*

1. வாய்மை எனப்படுவது ______.

   அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

   இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

2. ______ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

   அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்

   இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன்

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

   அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்

   இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம்

4. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

   அ) யா+எனின் ஆ) யாது+தெனின் இ) யா+தெனின் ஈ) யாது+எனின்

5. தன்+நெஞ்சு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

   அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு

6. தீது+உண்டோ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _________.

   அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோ இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ



7th Std Tamil Term 1_13.01.2020.indd 49 14-01-2020 11:27:40

சிறந்த அரசின் பணிகளை வரிசைப்படுத்தி எழுதுக.

அ) பொருளைப் பிரித்துச் செலவு செய்தல்.

ஆ) பொருள் வரும் வழிகளை அறிதல்.

இ) சேர்த்த பொருளைப் பாதுகாத்தல்.

ஈ) பொருள்களைச் சேர்த்தல்.

குறுவினா

1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?

2. வாழும் நெறி யாது?

3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?

கீழ்க்காணும் சொற்களைக் கொண்டு திருக்குறள் அமைக்க.

| | | | |
|---|---|---|---|
| பொருட்செல்வம் | எல்லாம் | பூரியார் | செல்வத்துள் |
| கண்ணும் | அருட்செல்வம் | உள | செவிச்செல்வம் |
| அச்செல்வம் | தலை | செல்வம் | – |

1. ___________ ___________ ___________ ___________

___________ ___________ ___________

2. ___________ ___________ ___________ ___________

___________ ___________ ___________ _

பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் 'அரிச்சந்திரன்' நாடகத்தைப் பார்த்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் 'பொய் பேசாமை' என்னும் அறத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பே காந்தியடிகள் எல்லார் இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.

2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.



7th Std Tamil Term 1_13.01.2020.indd 50 14-01-2020 11:27:40